## 14

# சபைகூடுதலில் ஒழுங்குமுறை தேவைப்பட்ட ஒரு சபை

## [1 கொரிந்தியர் 14:1-40]

*1 கொரிந்தியர் 12-14ல் பவுல், ஆவிக்குரிய வரங்களைப் பற்றி - பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களைப் பற்றி - கலந்துரையாடினார். அவற்றின் பயன்பாடுகள் மற்றும் தவறான பயன்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி அவர் விளக்கங்களை ஏற்படுத்தினார்.*

*12ம் அதிகாரத்தில் அவர், சரீரத்தின் வெவ்வேறு உறுப்புகள் [உறுப்பினர்கள்] ஆவிக்குரிய வெவ்வேறு வரங்களைக் கொண்டிருந்தனர் மற்றும் எவரொருவரும் மற்றவரைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவமானவர் அல்ல என்ற கருத்தைப் பராமரித்தார். அதற்குப் பதிலாக, எல்லாரும் (உயர்ந்ததாகக் காணப்பட்ட வரங்கள் மற்றும் தாழ்ந்ததாகக் காணப்பட்ட வரங்கள் கொண்டிருந்த அனைவரும் உட்பட) சரீரமாகிய சபையின் பணிக்கு சமமான வகையில் அத்தியாவசியமானவர்களாக இருந்தனர். 13ம் அதிகாரத்தில் நடபடிகள், "மிகவும் மேன்மையான வழியை" - அன்பின் வழியை - விவரித்தார். ஆவிக்குரிய வரங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் அன்பு மிகவும் முக்கியமானதாக உள்ளது மற்றும் கொரிந்தியர்கள், ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் ஒருவர் மற்றவர் மீது அன்புகூருதல் பற்றி அதிகம் அக்கறையாக இருக்க வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்க அவர் முயற்சி செய்தார்.*

*பின்பு 14ம் அதிகாரத்தில், ஆவிக்குரிய வரங்களில் சில - விசேஷமாக பல மொழிகளில் பேசுதல் மற்றும் தீர்க்கதரிசனம் உரைத்தல் ஆகிய வரங்கள் - சபை கூடுவருதல்களில் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டியவையாக இருந்தன என்பதைக் காண்பிக்கிறார். 23ம் வசனத்தில் பவுல், "ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து ..." என்று கூறினார், மற்றும் 26ம் வசனத்தில் அவர், "நீங்கள் கூடிவந்திருக்கிறபோது" என்று காலங்களைப் பற்றிக் கொரிந்தியர்களுக்கு எழுதினார்.*

*ஆகையால் நாம், 12ம் அதிகாரம் கிறிஸ்துவின் சரீரத்தில் ஆவிக்குரிய வரங்களின் பணிப்பொறுப்பு பற்றியது, மற்றும் 13ம் அதிகாரம் ஆவிக்குரிய வரங்களின் இரண்டாம் நிலை இடம் பற்றியது; மற்றும் 14ம் அதிகாரம் சபைகூடி வந்திருக்கும்போது ஆவிக்குரிய வரங்களின் பயன்பாடு பற்றியது என்று கூறலாம். ஒருவேளை நாம் - "அதிகம் மேன்மையான வழி" என்ற வகையில் அன்பின் மீது பவுலின் கவனக்குவிப்பும், அன்பைக் காட்டிலும் ஆவிக்குரிய வரங்கள் பெரிதும் தாழ்ந்தவையாக இருந்தன மற்றும் அவை கடந்து போகும் என்ற அவரது விளக்கமும் இருந்தபோதிலும் - அவற்றின் பயன்பாட்டை அவர் தடைசெய்யவில்லை, ஆனால் அதற்கு மாறாக ஊக்குவித்தார் (காண்க 14:1, 12,*

*39).* இருப்பினும் ஒவ்வொரு வரமும் சரியான வழியில் பயன்படுத்தப்படுதல் அவசியம் என்பதே இந்த சகோதரர்களுக்கு அவரது செய்தியாக இருந்தது.

## அன்றிருந்த சபை: சபைகூடுகையில் வரங்களின் பயன்பாடு

**புரிந்துகொள்ளுதலின் அவசியம் *(14:1-19)***

முதலில் பவுல், மொழிகளில் பேசும் வரம் என்பது சபைகூடுகைகளின் போது கூறப்படுபவற்றை கூடியிருப்பவர்களால் புரிந்துகொள்ள முடிந்தால் மாத்திரம் பயன்படுத்தப் படவேண்டியதாக இருந்தது என்று கூறினார். *பக்தி விருத்தியூட்டுதலுக்குப் புரிந்துகொள்ளுதல் அத்தியாவசியமானதாக உள்ளது.* தொகுப்பாகப் பவுல் பின்வரும் கருத்துக்களை ஏற்படுத்தினார்:

1. தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது புரிந்துகொள்ளப்படக் கூடியதாக இருந்ததால், அந்த வரம் மொழிகளில் பேசுதலைக் காட்டிலும் மேன்மையானதாக இருந்தது *(14:1-5)*. விளக்கியுரைத்தல் இன்றி கருத்து எதையும் ஏற்படுத்தாத மொழிகள், பேசுபவருக்குப் பயன் அளிக்கலாம்; ஆனால் விளக்கியுரைத்தல் இல்லாத நிலையில் அவைகள் கேட்பவர்களுக்கு அர்த்தம் நிறைந்தவையாக இருப்பது இல்லை. தீர்க்கதரிசனம் என்பது கேட்பவர்களுக்கு எப்போதுமே பயனுள்ளதாக இருக்க முடியும்.[1]

2. மொழிகளில் பேசுதல் என்பது, தீர்க்கதரிசன வரம் அல்லது போதிக்கும் வரம் போன்ற மற்ற வரங்கள் இணைந்திருந்தால் அன்றி, கேட்பவர்களுக்கு மதிப்பு எதையும் கொண்டிருந்தது இல்லை. பவுல், "மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?" என்று கேட்டார் *(14:6)*.

3. புல்லாங்குழல், சுரமண்டலம் அல்லது எக்காளம் ஆகியவற்றினால் உண்டாக்கப்பட்ட சத்தங்களினால் விவரிக்கப்பட்டபடி *(14:7-9)*, கூறப்பட்டது என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாக இருந்தது. மொழிகளில் பேசுதல் ஆவிக்குரிய சத்தியங்களை அறிவிக்கவில்லை என்றால் மதிப்பற்றதாக இருந்தது.

4. கேட்பவர்களுக்கு அந்நியப்பட்ட மொழியில் ஒருவர் பேசினால், அவரது பேச்சு அர்த்தம் அற்றதாக இருந்தது. ஒவ்வொரு பேச்சாளரும் சபைக்குப் பக்தி விருத்தி ஊட்ட வேண்டியிருந்தது *(14:10-12)*.

5. சபைக்குப் பக்திவிருத்தி ஊட்டுவதற்காக, மொழிகளில் பேசுபவர் விளக்கம் தரும் வரத்திற்காக ஜெபிக்க வேண்டியிருந்தது. பின்பு அவர் தமது வார்த்தைகளுக்கு விளக்கம் அளிக்க முடியும், அப்போது சபை பக்திவிருத்தி ஊட்டப்படும் விளைவைக் கொண்டிருக்கும். பின்வரும் அறிவுறுத்துதலைப் பவுல் கொடுத்து அதற்கு விளக்கம் அளித்தார்: "அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என்

கருத்து பயனற்றதாயிருக்கும்" (14:13, 14).

6. ஆராதனையில் ஈடுபட்டிருக்கும் சகோதர சகோதரிகளின் ஆவிகள் மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் மனங்களும் அதில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது அத்தியாவசியமாக இருந்தது. ஆராதனை வேளையின்போது நடந்த யாவையும் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக இருந்தது. பவுல், "இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" என்று தொகுத்துரைத்தார் (14:15).

7. கூறப்பட்டது என்ன என்பதை மற்றவர்கள் அறியமாட்டார்கள், எனவே ஜெபங்களுக்கு "ஆமென்" கூற இயலாதவர்களாக இருப்பார்கள் (14:16, 17) என்பதே, விளக்கம் அளித்தல் இன்றி மொழிகளில் பேசுதல் என்பதன் விளைவாக இருந்தது.

8. புரிந்துகொள்ளுதலின் அவசியம் காரணமாக, அவர் மொழிகளில் தாமே பேச முடிந்திருந்தாலும், சபைகூடுகைகளில் தாம் கூறுவதை மற்றவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் பேசும்படி பவுல் தெரிந்துகொண்டார். அவர், "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்" என்று முடித்தார் (14:18, 19).

### முறைப்படியான ஊழியத்திற்கான அவசியம் (14:20-40)

புரிந்துகொள்ளுதலுக்கான அவசியமானது அதிகம் திட்டவட்டமான அறிவுறுத்துதல்களைக் கொடுக்கும்படி பவுலை வழிநடத்திற்று. அடுத்ததாக அவர் முறைப்படியான ஆராதனை ஊழியத்தைக் கொண்டிருத்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

14:20-40 என்ற இந்த அதிகாரத்தின் பகுதியைப் பவுல், பின்பற்ற வேண்டியது என்ன என்பதற்கான காரணத்தைக் கொடுப்பதன் மூலம் தொடங்கினார். கொரிந்தியர்கள் பக்குவமான கிறிஸ்தவர்களாக இருப்பதற்கு (14:20), மொழிகளில் பேசுதல் என்பது அவிசுவாசிகளுக்காகப் பயன்படுத்தும்படி கொடுக்கப்பட்ட வேளையில், தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது விசுவாசிகள் பயன் அடைவதை நோக்கங் கொண்டிருந்தது என்பதைப் புரிந்துணர வேண்டியிருந்தது (14:21, 22). விளக்கம் அளித்தல் இன்றி மொழிகளில் பேசுதல் சபைகூடுகையில் பயன்படுத்தப்பட்டது என்றால், குழப்பமே அதன் விளைவாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு காட்சிப்படுத்துதலினால் அவிசுவாசிகள் மனம் ஈர்க்கப்பட மாட்டார்கள். இருப்பினும் சபைகூடுகையில் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனம் உரைத்தல் என்பது அவிசுவாசிகளுக்கும் மனம் ஈர்ப்பதாக இருக்கும் (14:23-25).

ஆவிக்குரிய வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் குழப்பத்தைத் தவிர்த்தல் ஆகியவற்றின் அடிப்படையில், பவுல் குறிப்பிட்ட சில விதிகளை அமைத்தார் (14:26-36). முறைமையைப் பாதுகாக்க சபைகூடுகையின் போது சகோதர சகோதரிகள் இந்த அறிவுறுத்துதல்களைப் பின்பற்ற வேண்டி இருந்தது: (1) சபைகூடுகையின்போது இருவர் அல்லது மூவர் மாத்திரம் மொழிகளில் பேச

*வேண்டும், மற்றும் அவர்கள் கூறுவது என்ன என்பதை விளக்கம் அளிக்கும் யாரேனும் ஒருவர் சபையில் இருந்தால் மாத்திரமே பேச வேண்டும் (14:26-28). (2) தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள் இருவர் அல்லது மூவர் மாத்திரம் பேச வேண்டும், இன்னொருவர் பேசிக்கொண்டிருக்கும்போது ஒருவருக்கு வெளிப்படுத்துதல் அருளப்பட்டிருந்தால், பேசுபவர் அமைதியாயிருந்து மற்றவர் தமக்கு வெளிப்படுத்தப்பட்டதை அறிவிக்கும்படி அனுமதிக்க வேண்டும். தீர்க்கதரிசிகள் ஒரு வேளையில் ஒருவர் மாத்திரமே பேச வேண்டும் (14:29-33). (3) சபைகூடுகையில் பெண்கள் அமைதியாயிருக்க வேண்டும் (14:34-36).*

*இந்த விதிகளைக் கொடுப்பதற்குப் பவுல் தாம் கொண்டிருந்த உரிமையை உறுதிப்படுத்தி முடித்தார் (14:37, 38). மீண்டுமாக அவர், அற்புத ஆவிக்குரிய வரங்கள் மதிப்பற்றவையாக இருந்தன என்று தாம் கூறவில்லை என்பதைக் குறிப்பிட்டார். அதற்கு நேர்மாறாக அவர், "இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்" என்று எழுதினார் (14:39). சகோதர சகோதரிகள் அவற்றை விரும்ப வேண்டும், ஆனால் அவற்றைத் தக்க கருத்துநோக்கில் காத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

*கடைசியாக அவர், சபைகூடுகையில் கொரிந்தியர்கள் ஆராதனையை நடத்துவதில் அவர்களை வழிநடத்தக் கூடிய ஒரு கொள்கையைக் கொடுத்தார்: "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" (14:40).*

*1 கொரிந்தியர் 12-14ல் கலந்துரையாடப்பட்ட அற்புத வரங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. ஆகையால், 14ம் அதிகாரத்தில் பவுல் கூறியவற்றில் அதிகமானவை நமக்கு நேரடியாக நடைமுறைப் படுவதில்லை. இருப்பினும் இங்கு அவரது போதனை மறைமுகமாக நடைமுறைப்படுகிறது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் சபைகூடுகைகளில் காண்பிக்க வேண்டிய நடக்கை பற்றி ஆளுகை செய்த அதே கொள்கைகள் நமது சபை கூடுகைகளில் நமது நடக்கைகளையும் ஆளுகை செய்ய வேண்டும். ஆகையால் நாம் சபைகூடிவரும்போது பின்பற்ற வேண்டிய கொள்கைகளுக்காக நாம் இந்த அதிகாரத்தைக் கண்ணோக்க வேண்டியது நியாயமானதாகவே உள்ளது.*

## இன்றிருக்கும் சபை: சபைகூடுகையில் தேவனைப் பிரியப்படுத்துதல்

**முறையாக சபை கூடிவருதலின் அவசியம்**

*இந்த அதிகாரம் சபைகூடுகையின் உண்மையை உறுதிப்படுத்துகிறது; சபையானது முறையான அடிப்படையில் கூடிவந்தது என்று இது சுட்டிக்காண்பிக்கிறது. உண்மையில் "சபை" என்ற வார்த்தை "சபைகூடுகை" போன்ற சிலவற்றை அர்த்தப்படுத்துகிறது.[2]*

*இந்த அதிகாரத்தில் நாம், சபைகூடிவருதல் பற்றி அடிக்கடி குறிப்புகளைக் காணுகிறோம்:*

- *19ம் வசனத்தில் பவுல், "அப்படியிருந்தும், நான் சபையிலே [சபைகூடுகையில்] ... ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக*

விருப்பமாயிருக்கும்” என்று கூறினார்.

- 23ம் வசனத்தில் அவர், “சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து” என்று கூறினார்.
- 26ம் வசனத்தில் அவர் “நீங்கள் கூடிவந்திருக்கிறபோது” என்ற நிகழ்வைப்பற்றிப் பேசுவதாகக் குறிப்பிட்டார்.
- 28ம் வசனத்தில் அவர், குறிப்பிட்ட சில நிபந்தனைகளின்கீழ், மொழிகளில் பேசுபவர் “சபையிலே [சபைகூடுகையில்]” அமைதியாக இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்.
- 34ம் வசனத்தில் அவர், “சபைகளில்” பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று கூறினார்.
- 35ம் வசனத்தில் “சபையிலே” பெண்கள் பேசுவது அயோக்கியமாயிருக்கும் என்று கூடுதலாகக் கூறினார்.

சபையானது முறையான அடிப்படையில் கூடிவர வேண்டும் என்பதற்கு மற்ற சாட்சியங்கள் வேதவசனங்களிலும் (உதாரணத்திற்கு, நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:2 ஆகிய வசனங்களைக் காணவும்) வரலாற்று ரீதியான ஆதாரமூலங்களிலும் காணப்பட முடியும். புறதெய்வ வணக்கத்தவர்களும் யூதர்களும் ஆகிய இருசாராருமே ஆராதிக்கக் கூடிவந்தனர் என்பதால், முதல் நூற்றாண்டு சபையார் ஆராதிக்கக் கூடாது இருந்திருந்தால் அது விசித்திரமானதாக இருந்திருக்கும்.

ஆகையால் சபை கூடிவந்தது என்று நாம் அறிகிறோம். அந்த உண்மை இன்று நமக்கு அர்த்தப் படுத்துவது என்ன? முதலாவது அது, இன்றைய நாட்களில் கர்த்தரின் சபை கூடிவருதல் அவசியம் என்று சுட்டிக்காண்பிக்கிறது. நாம் முறையாகக் கூடிவருதல் அவசியமாக உள்ளது. அது, சபைகூடி வரும்போது, உறுப்பினர்கள் அந்தக் கூட்டங்களில் தாங்கள் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அர்த்தப்படுத்துகிறது (எபிரெயர் 10:25). சபைகூடிவரும் ஒவ்வொரு வேளையிலும், நாம் அங்கு இருக்க வேண்டும். நாம், சபையில் உள்ள சக கிறிஸ்தவர்களின் உதவியின்றி, தற்சார்பான கிறிஸ்தவர்களாக - கிறிஸ்து கட்டளையிட்டபடி வாழ நமக்கு நாமே முயற்சி செய்யும் கிறிஸ்தவர்களாக - இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை.

**குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுதலின் அவசியம்**

14ம் அதிகாரம், சபை கூடுகைகளின் நோக்கத்தையும் - அவற்றைக் கொண்டிருக்க வேண்டியதன் காரணங்கள் மற்றும் அவை நிறைவேற்ற நோக்கங் கொண்டுள்ளவை என்ன என்பதையும் - நமக்குப் போதிக்கிறது. இந்த சபைகூடுகைகளின் நோக்கத்தை நாம் நெருங்கிக் கவனிப்பது அவசியமாக உள்ளது, ஏனெனில் நமது சபைகூடுகைகள், சபை மற்றும் தேவனை ஆராதித்தல் என்பவற்றிற்கானதாக மாத்திரம் இருக்க வேண்டும் என்று சிலர் நம்புகின்றனர். அவர்கள், முதல் நூற்றாண்டு சபையை, பக்தி விருத்தி ஊட்டுதல் மற்றும் ஆராதனை ஆகியவற்றுடன் இணைவு படுத்துகின்றனர், ஆனால் அந்த சபைகளில் எதுவும் புறம்பே இருப்பவர்களைச் சென்று அடைதலை இலக்காகக் கொண்டிருக்கவில்லை என்று உரிமைகோருகின்றனர்.

தேவனை ஆராதித்தல் என்பது எப்போதுமே முக்கியமானதாக இருந்துள்ளது

என்பது நிச்சயம், ஆனால் அது ஒன்று மாத்திரமே முதல் நூற்றாண்டு சபையின் சபைகூடுகைகளின் முழுநோக்கமாக இருக்கவில்லை. உதாரணமாக, 1 கொரிந்தியர் 14ல் குறிப்பிடப்பட்டுள்ள கபைகூடுகையின் வகையானது பல நோக்கங்களைக் கொண்டிருந்தது.

*பக்தி விருத்தி ஊட்டுதல்.* பக்திவிருத்தி ஊட்டுதலில் பவுலின் வலியுறுத்தம் இருந்தது. அவர், "சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது" என்று தெளிவாகக் கூறினார் (14:26ஆ; காண்க 14:3, 4, 5, 12, 17, 19). இருந்தபோதிலும், பக்திவிருத்தி ஊட்டுதல் என்பதுடன் கூடுதலாக, மற்ற நோக்கங்களும் இந்த சபைகூடுகைகளினால் உதவியாற்றப் பட்டிருந்தன.

*அவிசுவாசிகளுக்குப் போதித்தல்.* 23 முதல் 25 வரையுள்ள வசனங்களில் பவுல், சபைகூடுகையில் பிரவேசிக்கக் கூடிய "அவிசுவாசிகள்," அங்கு தாங்கள் அனுபவமாகப் பெறுவதன் மூலம் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ மனம் ஈர்க்கப்படலாம் என்பது பற்றிப் பேசினார். இவ்வசனப் பகுதி, அப்படிப்பட்ட சபைகூடுகைகளில் அவிசுவாசிகள் கலந்துகொண்டனர் என்பதை உறுதிப் படுத்துகிறது. இதன் விளைவாக, அந்த சபைகூடுகைகள் பக்தி விருத்தி ஊட்டுதலுக்கானவையாக மாத்திரம் இருக்கவில்லை. கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளுக்கு "பக்திவிருத்தி ஊட்டுவதில்லை"; நாம் அவர்களுக்கு "சுவிசேஷ ஊழியம்" செய்ய முயற்சிக்கிறோம்.[3]

*ஆராதனை.* 26ம் வசனத்தில் பவுல், சபைகூடுகையில் என்ன நடக்கலாம் என்பதை விவரிக்கையில் அவர், மற்ற விஷயங்களுடன் "உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான்" என்று கூறினார். தேவனைத் துதிப்பதற்காக சங்கீதங்கள் பயன்படுத்தப்பட்டன; அவைகள் தேவனை ஆராதிக்கப் பயன்படுத்தப் பட்டன. அவிசுவாசிகள், தாங்கள் கேள்விப்படுவதன் மூலம் மனம் ஈர்க்கப் படும்போது, அவர்கள் தேவனை ஆராதிப்பார்கள் என்று பவுல் அறிவித்தார் (14:25).

எனவே 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில் நாம், சபைகூடுகைகளில் தேவன் ஆராதிக்கப்பட்டார், பரிசுத்தவான்கள் பக்திவிருத்தி ஊட்டப்பட்டனர் மற்றும் அவிசுவாசிகள் போதிக்கப்பட்டனர் என்பவற்றிற்கான சாட்சியத்தைக் காணுகிறோம். இந்த சபைகூடுகைகள் கலப்பான இயல்பு கொண்டிருந்தன: (1) இவைகள் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்குமானவைகளாக இருந்தன. (2) இவைகள் பக்திவிருத்தி ஊட்டுதலுக்கும் சுவிசேஷ ஊழியத்திற்குமானவைகளாக இருந்தன. (3) இவைகள் போதித்தலுக்கும் ஆராதித்தலுக்குமானவைகளாக இருந்தன.

### குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்றுவதற்கான அவசியம்

சபைகூடுகைகளுக்கான சில விதிகளையும் நமது வேதவசனப் பகுதி நமக்குப் போதிக்கிறது. ஆம், விதிகள் இருந்தன! சபைகூடுகைகளின் பலவிபரங்களைத் தேவன் மனிதரின் உசிதநோக்கத்திற்கு விட்டு இருந்தார், ஆனால் சபைகூடிவரும்போது என்ன செய்ய வேண்டும் அல்லது அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை முற்றிலுமாக நாம் நமது சுய முடிவுகளின் பேரில் செய்யக் கூடாது. குறைந்த பட்சம் மூன்று விதிகள் இந்த அதிகாரத்தில் கருத்தாகத் தெரிவிக்கப் பட்டுள்ளன.

1. *புரிந்துகொள்ளுதல் அத்தியாவசியமானதாக உள்ளது.* சபைகூடுகையில் வெளிப்படையாக முன்வைக்கப்படுபவை புரிந்துகொள்ளப்படக் கூடியவையாக

இருக்க வேண்டும் என்பது இந்த அதிகாரத்தில் பவுலின் போதனையில் இருந்து தரவழைக்கப்படக் கூடிய ஒரு விதியாக உள்ளது. பேச்சாளர் ஒருவரின் பேச்சு புரிந்துகொள்ளப்படக் கூடியதாக இராதிருக்கும் பட்சத்தில் (எடுத்துக்காட்டாக, அவர் மொழிபெயர்ப்பாளர் இன்றி அயல் மொழியில் பேசும்படியான சூழ்நிலையில்), அவர் அமைதியாக இருக்க வேண்டும் எனறு பவுல் கூறினார். புரிந்துகொள்ளப்பட முடியாத எந்த ஒரு விஷயமும் கூடிவந்திருப்பவர்களுக்குப் பிரயோஜனமாக இருக்காது. இந்த விதியானது, ஆராதனையை நடத்துபவர்கள் அங்கு கூடிவந்திருக்கும் மக்களுக்குக் கேட்கும்படி பேசுதலையும் ஆராதனை ஊழியத்தில் நடைபெறுவது என்ன என்பதைப் பற்றிய தகவல்களை அளித்தலையும் சபை நடத்துனர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை நிபந்தனையாக்குகிறது. இது, பிரசங்கியார்களும் போதகர்களும் உரக்கப் பேசுதலையும் சபைகூடுகையில் உள்ள ஒவ்வொருவரும் கேட்கப் போதுமான அளவுக்குத் தெளிவாகப் பேசுதலையும் நிபந்தனையாக்குகிறது. பவுலின் போதனை, ஆராதனை ஊழியங்கள் உணர்வுகளை எழுப்புபவையாக இருக்க வேண்டும் என்றாலும், அது மாத்திரமே முழுமையான நோக்கமாக இருக்கலாகாது என்பதையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. தேவனுடைய வசனத்தைப் படிக்கவும் கர்த்தரைத் துதிக்கவும் நாம் கூடிவரும்போது, மனம் - புரிந்துகொள்ளுதல் - என்பதும் அதில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

2. *பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும்.* பெண்கள் அல்ல, ஆனால் ஆண்களே சபைகூடுகைகளில் நடத்துனர்களாக இருக்க வேண்டும் என்று பவுல் போதித்தார்.[4] பெண்களுக்கான விதியான "அமைதியாக இருக்க வேண்டும்" என்பது (14:34, 35) இந்த சந்தர்ப்பப் பொருளில் சபைகளுக்கு (நேரடியான அர்த்தத்தில், "சபைகூடுகைகளுக்கு") நடைமுறைப்படுகிறது.[5] இது மற்ற சந்தர்ப்பங்களில் - எடுத்துக்காட்டாக, பிள்ளைகளுக்கு அல்லது பெண்கள் வேதாகம வகுப்பில் அவர்கள் போதித்தல் போன்றவற்றில் - பெண்கள் பேசுதலைத் தடைசெய்வதில்லை.

இவ்வசனப்பகுதியானது, குறிப்பிட்ட நேரங்களில் தீர்க்கதரிசி மற்றும் மொழிகளில் பேசுபவர் ஆகியோர் பேசத் தடைசெய்யும் அதே வகையில் பெண்கள் பேசுதலையும் தடைசெய்கிறது (14:28, 30). சபைகூடிவருதலை நடத்திச் செல்லும் வகையில், ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தும் வகையில் பெண் பேசக்கூடாது.

3. *சபைகூடுகையானது "நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" நடத்தப்பட வேண்டும்.* ஒவ்வொரு விஷயத்தையும் "நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" (14:40; "நேர்த்தியாகவும் முறைப்படியும்"; KJV) செய்வதைப் பின்பற்ற வேண்டும் என்பது முதன்மை விதியாக உள்ளது என்பதை இந்த சகோதர சகோதரிகள் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

"நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" என்பது அர்த்தப்படுத்துவது என்ன? நல்லொழுக்கமான சபை கூடுகை என்பதற்கு எதிரானது, குழப்பத்தை - ஆராதனையில் பங்கேற்கும் மக்கள் பைத்தியம் பிடித்தவர்களாக இருந்தனர் என்று புறம்பே இருப்பவர்கள் நம்பக் காரணமாகும் ஒரு சூழ்நிலையை - உள்ளடக்கியதாக இருக்கிறது! (14:23). கொரிந்து நகரில் இருந்த சபையில் "நேர்த்தியும் முறைப்படியும்" என்பது ஒரு வேளையில் ஒருவர் பேசுதலையும் விளக்கம் அளிக்கக் கூடியவர் யாரேனும் இல்லை என்றால் மொழிகளில் பேசாது இருத்தலையும் உள்ளடக்கிற்று. நமது சூழ்நிலையில். நேர்த்தியானதும்

*முறைப்படியானதுமான சபைகூடுகைகளைக் கொண்டிருத்தல் என்பது, நமது ஆராதனை குழப்பம் அற்ற வகையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அர்த்தப்படவேண்டும். நமது சபைகூடுகைகள் நம்மைப் பார்வையிடுபவர்களை சாதகமான வகையில் மனம் ஈர்ப்பதாக, புரிந்துகொள்ளக் கூடிய மற்றும் பக்தி விருத்தி ஊட்டும் வகையிலான ஆராதனை அமைவாக இருக்க வேண்டும்.*

*இருப்பினும், ஒரு கலாச்சாரத்தில் நேர்த்தியானதும் முறைப்படியானதும் என்று கருதக்கூடிய விஷயமானது இன்னொரு கலாச்சாரத்தில் அவ்வாறு கருதப்படாதிருக்கலாம் என்பதை நாம் உணர்ந்து அறிய வேண்டும். சில சபைகுழுமங்கள் "ஆமென்!" என்று கூறி அல்லது பிரசங்கியார் பிரசங்கிக்கும்போது அவருடன் பேசி, அவரது பிரசங்கித்தலை ஊக்குவிக்கின்றன. இதற்குப் பழக்கமற்ற சபைகுழுமங்கள் இதை முறையற்றது என்ற வகையில் கண்ணோக்கலாம். இருப்பினும் இது பழக்கமாக உள்ள அந்த சபைகளுக்கு, இவ்விஷயம் முறையற்றதாகவோ அல்லது குழப்பம் ஊட்டுவதாகவோ இருப்பதில்லை. ஆகையால் நாம், நேர்த்தியானது மற்றும் முறைப்படியானது என்று நாம் செய்துள்ள முடிவுகளை மற்றொரு கலாச்சாரத்தில் உள்ளவர்களுக்கு நிர்ப்பந்தித்தல் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*

*அதே வேளையில், எங்குமுள்ள ஒவ்வொரு சபையும், தனது சொந்தக் கலாச்சாரத்தில், தான் செய்வது தகுதியானதாகவும் நேர்த்தியானதாகவும் முறைப்படியானதாகவும் இருப்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டும். ஏன்? முதலாவது, தகுதியானதும் நேர்த்தியானதும் முறைப்படியானதுமான ஊழியங்களைத் தேவன் விரும்புகிறார். முறைப்படியான ஆராதனை என்பது அவரது இயல்புக்குப் பொருத்தமானதாக உள்ளது, ஏனெனில் அவர் "கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்" (14:33). இரண்டாவது, முறைப்படியான சபைகூடுகைகள் பரிசுத்தவான்களைக் கட்டியெழுப்புவதாகவும் பார்வையாளர்களை மனம் ஈர்ப்பதாகவும் இருக்க அதிக சாத்தியக்கூறு உண்டு. இந்த அதிகாரத்தில் பவுலின் விளக்கங்களின்படி, நமது பார்வையாளர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப் பற்றி நாம் அக்கறையாக இருக்க வேண்டும்!*

## *முடிவுரை*

*நமது சபைகூடுகைகளின் மூலமாக நாம் தேவனைப் பிரியப்படுத்துவது எவ்வாறு? நாம் சபையாகக் கூடிவர வேண்டும் - மற்றும் அது, ஒவ்வொரு கிறிஸ்தவரும் வந்திருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது. நாம் நமது சபைகூடுகைகளின் மூலமாக ஆவிக்குரிய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்: தேவனை ஆராதித்தல் மற்றும்/அல்லது பரிசுத்தவான்களுக்குப் பக்திவிருத்தி ஊட்டுதல் மற்றும்/அல்லது அவிசுவாசிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல். இந்த சபைகூடுகைகளில் நாம் தேவனுடைய நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும், வெளிப்படையான முன்வைத்தல்கள் புரிந்து கொள்ளக் கூடியவைகளாக இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும், சபைகூடுகைகளை ஆண்கள் வழிநடத்திச் செல்ல அனுமதிக்க வேண்டும் மற்றும் சகலத்தையும் "நல்லொழுக்கமாயும் கிரமமாயும்" செய்ய வேண்டும்.*

குறிப்புகள்

[1]*"ஆராதனையில் தீர்க்கதரிசனம் உரைத்தலைச் செயல்படுத்துதல் விரும்பத் தக்கதாக உள்ளது, ஏனெனில் அது தனிநபர்களுக்கு மாத்திரமல்ல ஆனால் சபைக்கும் மதிப்புடையதாக உள்ளது"* (James A. Davis, "1-2 Corinthians," in *Evangelical Commentary on the Bible,* ed. Walter A. Elwell [Grand Rapids, Mich.: Baker Book House, 1989], 979). [2]*Ekklēsia* *என்பது கிரேக்க வார்த்தையாக உள்ளது.* (W. E. Vine, Merill F. Unger, and William White, Jr., "Assembly," in *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 42.) [3]*ஹால்லடே அவர்கள், சபைகூடுகையில் அவிசுவாசிகள் அல்லது புறம்பே இருப்பவர்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால், "சபைகூடுகையின் ஊழிய விருப்பநோக்கம் தெளிவாக உள்ளது" என்று கூறினார்* (Holladay, 184). [4]*இவ்வசனப் பகுதியின் தெளிவான போதனையாகத் தோன்றுவதைக் கல்வியாளர்கள்அடிக்கடி புறக்கணித்துள்ளனர். இடையூறு செய்யும் வகையில் கேள்வி கேட்கும் பெண்களுக்கு மாத்திரமே அந்தத் தடை நடைமுறைப்படுகிறது; அல்லது அது மனைவிகளுக்கு மாத்திரம் அல்லது ஒருவேளை தீர்க்கதரிகளின் மனைவிகளுக்கு மாத்திரம் நடைமுறைப்படுகிறது; அல்லது சபைகூடுகையில் குழப்பமான இயல்புக்குப் பங்களிக்கும் வகையில் பேசும் தீர்க்கதரிசினிகளுக்கு மாத்திரம் இது நடைமுறைப்படுகிறது* (Holladay, 190)*; அல்லது இது விதிவிலக்குகள் இல்லாத ஒரு பொதுவான விதியாக உள்ளது* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati, Ohio: Standard Publishing Foundation, n.d.], 143) *என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும் இங்கு பவுலின் போதனையானது 1 தீமோத்தேயு 2:11, 12ல் காணப்படும் அவரது போதனைக்குச் சீர்பொருத்தமாக இருப்பதால் - மற்றும் சில காரணங்களினால் இந்தக் கட்டுப்பாடு இன்றைய நாட்களின் சபையையும் கட்டுப்படுத்துகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.* [5]*இந்த கருத்தில் விளக்கவுரையாளர்கள் பொதுவாகக் கருத்து ஒருமைப்படுகின்றனர்.*